<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள் 15.07.2025**

**அசல் வழக்கு எண்கள். 182/2011**

**பி.வா.சா.1 – ஆனந்தன், த/பெ.Krishnasamy**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

உங்களுடைய பிறந்த தேதி என்ன என்றால் **03.05.1965.** என்ன படித்து உள்ளீர்கள் என்றால் பிளஸ் டூ படித்துள்ளேன். குடும்ப விஷயம் பற்றி நீங்கள் எந்த வயதில் அறிந்து கொண்டீர்கள் என்றால் **1983**இல் அறிந்து கொண்டேன். பிறந்தநாள் வாழ்த்து மூலத்தில் நீங்கள் சொன்ன சங்கதிகள் அனைத்தும் நீங்கள் பிறப்பதற்கு முன்பு நடந்தவை உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் பிறப்பதற்கு முன்பு நேரடியாக தெரியாது. உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் **21.04.1961** அன்று எழுதப்பட்ட செட்டில்மெண்ட் பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு நேரடியாக தெரியாது ஆவணங்கள் அடிப்படையில் தெரியும். மேற்படி ஆவணத்தை நீங்கள் எந்த வருடம் முதல் முதலாக பார்த்தீர்கள் என்றால் **2008** இல் தான் நான் நேரடியாக பார்த்தேன். **1961** ஆண்டு செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள வாசகத்தை நீங்கள் படித்து பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்த்தேன். இப்பொழுது தங்களிடம் உங்கள் கையில் அந்த ஆவணம் உள்ளதா என்றால் வீட்டில் உள்ளது. அந்த ஆவணத்தின் நகலை எந்த ஆண்டு வாங்கினீர்கள் என்றால் **2010**ல் தான் வாங்கினேன். ஆகவே ஆவணங்கள் குறித்து உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது சொல்ல சொல்லி தான் தெரியும் என்றால் சொல்லித்தான் தெரியும். நீங்கள் உங்கள் சகோதரர்களுடன் வாதியாக சேராமல் பிரதிவாதியாக சேர்ந்ததற்கு காரணம் என்ன என்றால் நான் அரசு பணியில் பணியில் இருந்தேன் ஆகவே சென்னையில் இருந்து அடிக்கடி காஞ்சிபுரம் வர முடியாது என்பதால் என் தம்பியை வழக்கு தாக்கல் செய்ய சொன்னேன். நீங்கள் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் உங்கள் தம்பியுடன் வழக்கறிஞர் அலுவலகம் சென்று வழக்கு சங்கதி குறித்து வழக்கறிஞர்களிடம் எடுத்துரைத்தீர்களா என்றால் நான் எடுத்துரைக்கவில்லை என் தம்பி தான் வழக்கறிஞர் அலுவலகம் சென்று வழக்கு தாக்கல் செய்தார். வழக்கினுடைய சங்கதிகளை படித்து பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்த்தேன். ஆகவே உங்கள் தம்பி தாக்கல் செய்த வழக்கில் உள்ள வழக்கு சங்கதிகளுக்கும் எதிர் வழக்குரையில் நீங்கள் சொல்லியுள்ள வழக்கு சங்கதிகளுக்கும் சங்கதிகள் மாறுபட்டு உள்ளது என்று சொன்னால் சரிதான். கூட்டுக் குடும்பத்தில் எந்த ஆண்டு வரை நீங்கள் இருந்தீர்கள் என்றால் **1996** வரை காஞ்சிபுரத்தில் குடும்பத்துடன் இருந்தேன் அதன் பிறகு பணி நிமித்தமாக சென்னை சென்று விட்டேன். கூட்டு குடும்பத்தில் இருக்கும்போது நீங்கள் அரசு பணியில் இருந்தீர்களா என்றால் நான் இல்லை. அரசு பணியில் எப்போது சேர்ந்தீர்கள் எப்போது ரிட்டையர்டு ஆனீர்கள் என்றால் **2006** நவம்பர் முதல் **2025** மே வரை பணியில் இருந்தேன். உங்கள் பாட்டனர் ராகவாச்சாரி குறித்து நீங்கள் கூறியுள்ளது நேரடியாக

தெரியுமா சொல்ல கேட்டு தான் தெரியுமா என்றால் நேரடியாக தெரியும். உங்கள் தாத்தா ராகவாச்சாரி என்பவருக்கும் லட்சுமி பாய் என்பவருக்கும் தொடர்பு இருந்த விவரம் நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியும். மேற்படி இருவரும் எத்தனை ஆண்டுகள் ஒன்றாக கூடி வாழ்ந்தார்கள் என்றால் எனக்கு நினைவு தெரிந்து **1978** ஆம் ஆண்டு வரை அவர்களை தெரியும் சுமார் பத்து ஆண்டுகளாக எனக்கு தெரியும். சுமார் **10** ஆண்டுகளாக கூடி வாழ்ந்திருப்பார்கள். உங்களுக்கு நினைவு தெரிந்து சுமார் **40 50** ஆண்டுகளாக கூடி வாழ்ந்தார்கள் ஆனால் வாழ்க்கைக்காக போய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. லட்சுமி பாய் எங்கு வசித்து வந்தார் என்றால் **40** சி என் அண்ணாதுரை தெரு சின்ன காஞ்சிபுரத்தில் வசித்து வந்தார். நீங்கள் அந்த அம்மாவை பார்க்க எத்தனை இவரை சென்று இருக்கிறீர்கள் என்றால் நிறைய முறை சென்றுள்ளேன் அந்த வீட்டிற்கு. அந்த வீட்டினுடைய வரி யார் பெயரில் இருந்தது என்றால் லட்சுமிபாய் அம்மாள் பேரில் இருந்தது. அவ்வாறு வரி ரசீதுகளை நீங்கள் கண்ணால் பார்த்தீர்களா நான் பார்க்கவில்லை. எதன் அடிப்படையில் அவ்வாறு கூறுகிறீர்கள் என்றால் வீடு அந்த அம்மா பெயரில் இருப்பதால் அவ்வாறு கூறுகிறேன். ராகவாச்சாரியார் அவரது மனைவி மங்கலம்மாளுக்கும் எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் பிள்ளைகள் இருந்தார்கள். அவருக்குப் பிறந்த பெண் குழந்தை இருக்கிறார்களா என்றால் உயிருடன் இல்லை. ஆகவே ராகவாச்சாரிக்கு ஏக வாரிசு உங்கள் அப்பா திரு கிருஷ்ணசாமி அவர்கள் மட்டும் என்று சொன்னால் சரிதான். உங்கள் தாத்தா ஜோசியர் ராகவாச்சாரியார் **1983**ல் இறந்தார் என்றால் சரிதான். அவ்வாறு அவர் இறந்தபொழுது கூட்டுக் குடும்பத்திற்கு எந்தெந்த ஊரில் எந்தெந்த சத்துக்கள் இருந்தன என்றால் நம்பர் **11** மேட்டுப்பாளையம் தெரு, நம்பர் **40** சி என் அண்ணாதுரை தெரு மற்றும் முசரவாக்கம் கிராமத்தில் சுமார் **7** ஏக்கர் நிலம் இருந்தது. நம்பர் **11** மேட்டுப்பாளையம் தெருவில் உள்ள வீடு உங்களுடைய சொந்த சொத்தா அல்லது டிரஸ்ட் சொத்தா என்றால் சொந்த சொத்து ஆகும். அந்த சொத்து தற்போது உங்கள் வசம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி சொத்து யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் அது விற்கப்பட்டது ஆகும். அந்த சொத்து ட்ரஸ்ட் சொத்து என்றால் சரியில்லை. நீங்கள் சொல்வது தவறு அந்த சொத்து டிரஸ்டிகள் எடுத்துக்கொண்டு அவர்கள் சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரி இல்லை. நம்பர் **11** மேட்டுப்பாளையம் தெருவில் உள்ள சொத்து டிரஸ்டு சொத்து கிடையாது. நம்பர் **11** மேட்டுப்பாளையம் தெருவில் உள்ள சொத்து விற்று விட்டதாக கூறுகிறீர்கள் அதனை விற்கும் போது நீங்கள் கையொப்பம் போட்டீர்களா என்றால் நான் கையொப்பம் போட்டுள்ளேன். மேற்படி ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. உங்கள் தாத்தாவிற்கு சொந்தமான சொத்து குறித்து ஆவணங்கள் வருவாய் ஆவணங்கள் நகராட்சி ஆவணங்கள் கிராம நிர்வாக அதிகாரியிடம் ஆவணம் ஏதேனும் வாங்கிய தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஏழு ஏக்கர் உள்ள முசரவாக்கம் சொத்தினை விற்றது யார் என்றால் என்னுடைய தகப்பனார் மற்றும் என்னுடைய சகோதரர்கள் சேர்ந்து விற்றோம். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் செய்யவில்லை. உங்கள் பாட்டனர் எழுத்து மூலமாக ஆவணங்கள் ஏதேனும் எழுதி வைத்தார் என்றால் இல்லை.

கதவு எண் **40** சி என் அண்ணாதுரை தெருவில் உள்ள இடத்திற்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த வீட்டை வழக்கு தாக்கல் செய்த பிறகு நீங்கள் சென்று பார்த்தீர்களா என்றால் பார்த்து இருக்கிறேன். உங்கள் தாத்தா பாட்டி வாழ்ந்த போது இருந்த போது இருந்த மாதிரி வீடு இருக்கிறதா அல்லது கட்டிடம் தற்போது மாறியிருக்கிறதா என்றால் தற்போது மாறியிருக்கிறது. அப்பொழுது ஓட்டு வீடாக இருந்தது பின்புறம் காலி மனை இருந்தது தற்பொழுது முழு கட்டிடமாக இருந்து வருகிறது. லட்சுமிபாய் பெயரில் இருந்த சொத்து உங்கள் தாத்தா பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் வருவாய் ஆவணத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பெயர் மாற்றம் எப்போது செய்யப்பட்டது என்றால் **1964** செய்யப்பட்டது. நீங்கள் பிறப்பதற்கு முன்பாகவே சொத்து பெயர் மாற்றம் ஆகிவிட்டது என்றால் சரிதான்.

**Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.**

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.